# சுகாதார அமைச்சு

## துணை மருத்துவ சேவையின் குடும்பநல உத்தியோகத்தர்கள் பயிற்சி நெறிக்கு பயிலுனர்கள் ஆட்சேர்த்தல்

சுகாதார அமைச்சின் துணை மருத்துவ சேவையின் குடும்பநல உத்தியோகத்தர் பயிற்சி நெறிக்காக பயிலுனர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு 2015 அல்லது 2016 அல்லது 2017 ஆகிய ஆண்டுகளில் ஏதாவது ஒரு வருடத்தில் க.பொ.த (உ.த) பரீட்சையில் ஏதாவது ஒரு துறையில் சித்தியடைந்த இலங்கை பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

**கவனிக்க வேண்டியவை:**

2019.08.30 ஆம் திகதிய 2139 எனும் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் க.பொ.த (உ/ தர) பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய விண்ணப்பித்து, நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு ஏற்கனவே குடும்பநல உத்தியோகத்தர் பயிற்சிக்கு பதிவு செய்துள்ள மாணவர்கள் இந்த வர்த்தமானி அறிவிப்பின் கீழ் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

| சேவை | பயிற்சி நெறியின் பெயர் | பயிற்சிக்காலம் | பயிற்சியை தொடர வேண்டிய மொழி |
|---|---|---|---|
| துணை மருத்துவ சேவை | குடும்பநல உத்தியோகத்தர் | வெளிக்களப் பயிற்சி 06 மாதங்கள் உள்ளடங்களாக 1½ வருடங்கள் | சிங்களம் / தமிழ் |

அட்டவணை இலக்கம் 01

02. **பதவிக்கு உரித்தான கல்வி மற்றும் ஏனைய விஷேட தகைமைகள் :**

| க.பொ.த.(சா.தர) தகைமைகள் | க.பொ.த.(உ.த) தகைமைகள் | பயிற்சிக்கு உரித்தான ஏனைய விஷேட தகைமைகள் |
|---|---|---|
| சிங்கள மொழி/ தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) சித்தியடைந்திருத்தல். | 2015 அல்லது 2016 அல்லது 2017 ஆகிய ஆண்டுகளில் ஏதாவது ஒரு வருடத்தில் க.பொ.த (உ.தர) பரீட்சையில் ஏதாவது ஒரு துறையில் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல். விஞ்ஞான பிரிவில் க.பொ.த (உ.தர) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | 1. பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.<br>2. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு (2021.02.01) 18 வயதிற்கு குறையாமலும், 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.<br>3. உயரம் 4 அடி 10 அங்குலம் அல்லது அதற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும். (147 CM)<br>4. அனைத்து விண்ணப்பதாரர்களும் திருமணமாகாதவர்களாக இருக்க வேண்டும் என்பதுடன், பயிற்சிக் காலத்தில் திருமணம் செய்யக்கூடாது. கோட்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு தற்காலிகமாக சேவையில் ஈடுபடுத்தப்படும் மாணவர்களும் முறையாக பயிற்சிக்காக நியமிக்கப்பட்டு நியமனம் வழங்கும் வரை திருமணத்தில் நுழைய முடியாது. |

அட்டவணை இலக்கம் 02

**3. கற்கை நெறிக்குரிய விஷேட விடயங்கள்:**

3.1. குடும்பநல உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் மற்றும் அதில் காலத்திற்குக்காலம் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களுக்கு அமைய தகைமைகளை கொண்டுள்ள விண்ணப்பதாரிகளில் இருந்து ஆட்சேர்ப்பு செய்யப்படும் என்பதுடன், விண்ணப்பதாரிகளின் க.பொ.த (உ.தரம்) Z மதிப்பெண் அடிப்படையில் பயிற்சி நெறிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

3.2. கணிக்கப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் பயிற்சித் திறன் என்பவற்றுக்கு அமைய பயிற்சிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். நாடளாவிய ரீதியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்படும் மொத்த எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திலும் சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு சனத்தொகையின் விகிதாசாரத்திற்கு ஏற்ப பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

3.3. அதன்பின்னர் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டிய எண்ணிக்கை, உரிய மாவட்டத்திலிருந்து ஒவ்வொரு வருடத்திலும் விண்ணப்பித்து தேவையான குறைந்தபட்ச கல்வித்தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கு பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஒவ்வொரு வருடமும் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

3.4. விஞ்ஞான பிரிவில் க.பொ.த (உ/தரம்) சித்தியடைந்த மாணவர்களுக்கு முன்னுரிமை அளித்த பின்னர், ஒவ்வொரு வருடமும் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை அந்த ஆண்டின் எந்தவொரு பாடத்துறையில் விண்ணப்பித்து குறைந்தபட்ச தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கு பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஒவ்வொரு பாடத்துறைகளில் அதிகூடிய Z மதிப்பெண் பெறும் விண்ணப்பதாரர்கள் மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.

3.5. ஒரு மாவட்டத்திற்கு மேலே குறிப்பிட்டுள்ளபடி ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையை அம்மாவட்டத்தில் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களால் பூர்த்தி செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கையை நாட்டின் அனைத்து மாகாணங்களுக்கும் இடையே அந்த மாகாணங்களின் மக்கள்தொகைக்கு ஏற்ப மறுபகிர்வு செய்யப்படும்.

**04. பொது விடயங்கள்:**

4.1. இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும்.

4.2. சகல விண்ணப்பதாரிகளும் நாட்டின் எப்பாகத்திலும் பணியாற்ற கடமைப்பட்டிருத்தல் வேண்டும்.

4.3. சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

4.4. விண்ணப்பதாரி சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

4.5. பயிற்சியின் பின்னர் மத்திய அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர நியமனம் கிடைத்தால் குறைந்த பட்சம் பத்து (10) வருடங்கள் பணியாற்ற வேண்டும்.

4.6. விண்ணப்ப முடிவுத் திகதியான **2021.02.01** ஆம் திகதிக்கு கிட்டிய 03 வருடங்கள் தொடர்ச்சியாக தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் வசித்திருக்க வேண்டும். தமது வசிப்பிடத்தை உறுதிப்படுத்த கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

குறிப்பு:

யாரேனுமோர் விண்ணப்பதாரியின் தகப்பன் அல்லது தாய் அரச, மாகாண அரச சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் இடமாற்றம் பெறக்கூடிய சேவையிலுள்ள காரணத்தால் அல்லது வேறு தவிர்க்க முடியாத காரணங்களினால் விண்ணப்பதாரியொருவருக்கு கிட்டிய 03 வருட வதிவை உறுதி செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் அது தொடர்பான இறுதித்தீர்மானம் சுகாதார அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும்.

**5. ஏனைய விடயங்கள் :**

5.1. இப்பாட நெறி முழுநேர பாட நெறியாகும். எனவே, ஐந்து வார நாட்கள் மற்றும் சனிக்கிழமை முற்பகலில், பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது சுகாதார அமைச்சின் கீழ் அல்லது அரச நிறுவனமொன்றில் முழு நேர கற்கை நெறியை தொடரும் மாணவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியாது. பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது பிற அரச நிறுவனமொன்றில் முழு நேர கற்கையை தொடரும் ஒருவர் இதற்காக விண்ணப்பிக்க விரும்பினால், அதற்காக கீழே (5.2) இல் குறிப்பிட்டுள்ள முறைகளைப் பின்பற்ற வேண்டும். சுகாதார அமைச்சின் கீழ் முழு நேர கற்கை நெறிக்காக பதிவு செய்த ஒருவர் இதற்காக விண்ணப்பிக்க விரும்பினால், அதற்காக கீழே (5.3) இல் குறிப்பிட்டுள்ள முறைகளைப் பின்பற்றப்படல் வேண்டும். அப்படி ஒருவர் (5.2) மற்றும் (5.3) பிரிவுகளுக்கு இணங்காமல் விண்ணப்பித்து பிறகொரு சந்தர்ப்பத்தில் அது நிரூபிக்கப்பட்டால் அவர் உரிய கற்கை நெறியிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்படுவதுடன் அதுவரை அரசாங்கத்தினால் அதற்காக செலவிடப்பட்ட தொகையை அவரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

5.2. நீங்கள் ஏதாவது பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது வேறு அரச நிறுவனமொன்றில் முழு நேர கற்கை நெறிக்காக இணைந்திருந்தால் அல்லது பதிவு செய்திருந்தால், நீங்கள் குடும்பநல பயிற்சி நெறிக்கு பதிவு செய்யும் திகதிக்குள் அந்த பதிவை இரத்துச் செய்து கொள்ள வேண்டும். நீங்கள் பல்கலைக்கழகமொன்றில் அல்லது பிற அரச நிறுவனமொன்றில் முழு நேர கற்கை நெறியொன்றுக்கு பதிவு செய்து விரிவுரைகளில் கலந்து கொள்ளாவிட்டாலும் நீங்கள் அந்த நிறுவனத்தின் மாணவராக கருதப்படுவீர்கள் என்பதால், அத்தகைய விண்ணப்பதாரர்களும் தங்கள் பதிவை இரத்துச் செய்ய வேண்டும். தேவையான சந்தர்ப்பத்தில் அதை உறுதி செய்வதற்கு போதுமான எழுத்துமூல ஆவணங்கள் உங்களிடம் இருத்தல் வேண்டும்.

5.3. சுகாதார அமைச்சின் கீழ் நடாத்தப்படும் முழு நேர பயிற்சி நெறியில் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரியாயின், அவர்கள் இப்பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்டால் அதுவரை அவர்கள் பெற்ற பயிற்சிக்காக கைசாத்திடப்பட்ட ஒப்பந்தங்களின்படி, பெறப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளையும் செலுத்தி உரிய பயிற்சியிலிருந்து நீங்கிக் கொண்டால் மட்டுமே இந்த பயிற்சிக்கு பதிவு செய்யப்படுவார்கள்.

5.4. நீங்கள் ஏதாவது பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருப்பின் அந்தப் பட்டம் செல்லுபடியாகும் திகதி (Effective Date) விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளும் திகதி முந்திய திகதியாக இருக்க வேண்டும்.

5.5. 2021.02.01 திகதிக்கு பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது பிற அரச நிறுவனமொன்றில் அல்லது சுகாதார அமைச்சின் கீழ் நடாத்தப்படும் முழு நேர கற்கை நெறிகளில் பதிவு செய்த ஒருவராக இல்லாவிட்டாலும், ஏதாவது காரணத்தால் இந்த பயிற்சி நெறிக்கு பதிவு செய்யும் திகதிக்குள் பதிவு செய்திருப்பின் அவர்களும் மேற்படி பயிற்சிக்கான பதிவை மேற்கொள்ள முன்னர் அந்த கற்கை நெறியின் பதிவை இரத்துச் செய்து கொள்ள வேண்டும்.

5.6. மேற்படி சகல நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருந்தாலும் நீங்கள் நிச்சயமாக இந்த கற்கை நெறிக்கு இணைக்கப்படுவதாக இந்த வர்த்தமானி அறிவிப்பில் உள்ள எந்தவொரு உட்பிரிவிலும் குறிப்பிடப்படவில்லை என்பதை நினைவில் கொள்ளல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகளை பூர்த்தி செய்திருந்தாலும் நீங்கள் போதியளவு Z பெறுமானத்தை பெறாத விடின் அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளை பூர்த்தி செய்திராவிடின், நீங்கள் எந்த வகையிலும் இப்பயிற்சிக்கு தகுதியற்றவராகவே கருதப்படுவீர்கள்.

5.7. கல்வித்தகைமைகள் மற்றும் ஏனைய சகல தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித்திகதியான 2021.02.01 திகதிக்கு அனைத்து வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**06. விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

6.1. மேற்படி பயிற்சி நெறிக்கு சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www.health.gov.lk) ஊடாக மட்டுமே இதற்காக விண்ணப்பிக்க முடியும். அதற்காக இந்த அமைச்சின் இணையத்தளத்தில் உரிய பகுதியில் உள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தை நிரப்புவதற்கு அறிவுறுத்தல்கள் பத்திரத்தை பார்க்கவும்.

6.2. விண்ணப்பதாரி ரூபா 500/= பணத்தை இலங்கை வங்கி, தெப்ர பிறேன், இலக்கம் **7041318** எனும் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்தின் கணக்கிற்கு செலுத்த வேண்டும். இதனை எந்தவொரு இலங்கை வங்கி கிளையிலும் அல்லது பண வைப்பு இயந்திரம் அல்லது இணையத்தள வங்கி சேவைகளின் ஊடாக செலுத்த முடியும். இக்கட்டணம் எந்த காரணத்திற்காகவும் மீண்டும் திருப்பித்தர மாட்டாது என்பதுடன் வேறு எந்த பரீட்சைக்காகவும் மாற்றம் செய்வதற்கும் அனுமதிக்கப்பட மாட்டாது.

6.3. இவ்வாறு தங்களினால் வெற்றிகரமாக பதிவேற்றிய (UPLOAD) விண்ணப்பத்தின் பிரதிகள் **தபால் ஊடாக இந்த அமைச்சிற்கு அனுப்பவேண்டிய அவசியம் இல்லை. ஆனாலும் விண்ணப்பத்தை பதிவேற்றிய பின்னர் கிடைக்கும் 5 இலக்கக் குறியீட்டை, அச்சு பிரதியை பின்னர் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக பாதுகாப்பாக வைத்திருக்கவும்.** அவ்வாறே விண்ணப்பத்தின் அச்சுப்பிரதியொன்றை (PRINT OUT) பெற்று அதில் உரிய இடத்தில் உங்கள் கையொப்பத்தை இட்டு கையொப்பத்தை சான்றுறுதி செய்து நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் அதை கொண்டுவர வேண்டும். (7.1 வது பகுதியை பார்க்கவும்)

குறிப்பு:

இந்த கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பதற்கான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது ஏதேனும் சிக்கல்கள் இருந்தால் மட்டும் அது தொடர்பாக **வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் 4.00 மணி வரை சுகாதார அமைச்சின் மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவின் 0112 340 007 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.** (உரிய அனைத்து தகவல்களும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் மற்றும் சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளதால், இதுபோன்ற விடயங்களை விசாரிப்பதை தவிர்க்கவும்)

**7. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:**

7.1. இலங்கை நிருவாக சேவையின் உத்தியோகத்தர் ஒருவரினால்/கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தர் ஒருவரினால்/இலங்கை கணக்காளர் சேவையின் உத்தியோகத்தர் ஒருவரினால் / அரச பாடசாலையொன்றின் அதிபர் ஒருவரினால்/ சமாதான நீதவான் ஒருவரினால்/ சட்டத்தரணி ஒருவரினால் அல்லது வருடாந்த சம்பளம் **512148/=** இற்கு குறையாத சம்பளம் பெறும் நிரந்தர ஓய்வூதியம் பெறும் அரச உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7.2. அரசாங்கம் அல்லது அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனங்களில் சேவையாற்றும் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் திணைக்கள தலைவர்களினூடு அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் இது வெளிவாரியான ஆட்சேர்ப்பு என்பதை கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

7.3. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு இணங்காத விண்ணப்பங்கள் மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்காப்படும்.

**8. நேர்முகப்பரீட்சைக்கு நீங்கள் அழைக்கப்பட்டால் நீங்கள் சமர்ப்பிக்க வேண்டிய விபரங்கள் :**

8.1. நீங்கள் வெற்றிகரமாக பதிவேற்றிய இணைத்தள விண்ணப்பத்திற்கு அமைய குறைந்தபட்ச கல்வித் தகைமையை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுள் Z பெறுமதிக்கு அமைய தயாரிக்கப்பட்ட முதன்மை பட்டியலொன்றை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சுகாதார அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முக பரீட்சை சபையொன்றின் மூலம் பொதுவான நேர்முக பரீட்சையொன்று நடாத்தப்படுவதுடன், நேர்முக சபையினால், இந்த பதவிக்குரிய சேவை பிரமாணக்குறிப்பு மற்றும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குடும்பநல உத்தியோகத்தர் பதவிக்காக குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் உடல் மற்றும் உள தகைமைகள் என்பன பரிசீலிக்கப்படும். நேர்முகப்பரீட்சையின் போது விண்ணப்பதாரிகளால் பின்வரும் ஆவணங்களின் <u>மூலப்பிரதிகளை</u> சமர்ப்பித்தல் வேண்டும்.

8.2. இணையத்தளத்தின் ஊடாக பதிவேற்றிய (UPLOAD) விண்ணப்பத்தின் அச்சுப்பிரதி (உங்களது கையொப்பம் சான்றுறுதி செய்த)

8.3. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.

8.4. க.பொ.த (உ.தர) பரீட்சை பெறுபேறு மற்றும் Z பெறுமானத்தைக் குறிக்கும் சான்றிதழ் (பரீட்சை திணைக்களத்தினால் வழங்கப்பட்ட)

8.5. க.பொ.த (சா.தர) பரீட்சை பெறுபேற்றுச்சான்றிதழ் (பரீட்சை திணைக்களத்தினால் வழங்கப்பட்ட)

8.6. ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

8.7. ரூபா 500/- பணம் செலுத்தியதை உறுதிப்படுத்துவதற்கான பற்றுச்சீட்டு

8.8. வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான கிராம சேவை உத்தியோகத்தரினால் வழங்கப்படும் வதிவு தொடர்பான சான்றிதழ்

8.9. விவாகமாகாதவர் என்பதை உறுதிப்படுத்துவதற்கான சமாதான நீதவான் முன்னிலையில் 50/- ரூபா முத்திரை ஒன்றின் மேல் கையொப்பமிடப்பட்ட முறையான சத்தியக் கடதாசி

8.10. நீங்கள் ஏற்கனவே பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அரச நிறுவனமொன்றில் அல்லது சுகாதார அமைச்சில் முழு நேர பயிற்சி நெறியொன்றில் பதிவு செய்யவில்லை எனின் அதுபற்றியும் பதிவு செய்திருப்பின் அதுபற்றிய விபரங்களையும் குறிப்பிட்டு நீங்கள் குடும்பநல உத்தியோகத்தர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் ஏற்கனவே பதிவு செய்துள்ள கற்கை நெறியிலிருந்து சட்டபூர்வமாக/ஒப்பந்தத்தின் படி விலகுவதாக சுகாதார செயலாளருக்கு தங்களினால் சமர்ப்பிக்கப்படும் தங்களின் சான்றுறுதி கடிதம். (இது தங்களினால் எழுதும் கடிதமாகும். இதனை வேறு யாரும் சான்றுறுதி செய்ய வேண்டிய அவசியமில்லை)

குறிப்பு :

(அ). அத்துடன், மேலே குறிப்பிடப்பட்டுள்ள 8.2 தொடக்கம் 8.10 வரையான ஆவணங்களில் தம்மால் சான்றுறுதி செய்யப்பட்ட நிழற்பிரதிகளை நேர்முகப்பரீட்சைக்கு வரும் போது எடுத்து வர வேண்டும்.

(ஆ). பயிற்சிப் பாடசாலைகளில் காணப்படும் இடவசதிகள் மற்றும் சேவை அவசியத்திற்கு ஏற்ப பயிற்சிக்கு இணைக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை என்பன சுகாதார அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

(இ). நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் அனைவரும் பயிற்சிக்கு இணைக்கப்படுவதாக இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த உட்பிரிவிலும் குறிப்பிப்படவில்லை என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

**09. பயிற்சித் திட்டம் :**

9.1. நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரரகள் இந்த பயிற்சி நெறியை தொடர்வதற்கு உரிய பயிற்சிக் கல்லூரிகளுக்கு உள்வாங்கப்படுவர். பயிற்சிக்காலம் மற்றும் கற்கை நெறியை தொடர வேண்டிய மொழி தொடர்பாக இலக்கம் 01 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

9.2. பயிற்சிக்காக இணைக்கப்பட்ட பயிலுனர்கள் பயிற்சிக் கல்லூரிகளில் வலுவில் இருக்கும் விதிமுறைகளுக்குக் கட்டுப்படல் வேண்டும். அவ்விதிமுறைகள் மற்றும் அரசினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

9.3. பயிற்சிக்காலத்தில் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியடைய தவறும் அல்லது அவர்களின் பணி மற்றும் நடத்தை ஆகியவற்றில் திருத்தியடையாதவர்கள் அல்லது தமது பயிற்சி கல்லூரியின் பரீட்சை மற்றும் லீவு நிபந்தனைகளுக்கு இணங்கத் தவறியவர்கள் அல்லது பயிற்சிக்கான ஆட்சேர்ப்பிற்காக சமர்ப்பிக்கப்பட்ட கல்வி மற்றும் பிற தகுதிகள் தவறானவை எனக் கண்டறியப்பட்டால் பயிற்சியின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவ்வித இழப்பீடுகளும் இன்றி பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

9.4. பயிற்சியாலர்களுக்கு பயிற்சிக் காலத்தில் அரச நிருவாக சுற்றறிக்கை 03/2016 இன் உப அட்டவணை V இன் விதிமுறைகளுக்கு அமைய மாதாந்த கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

9.5. பயிற்சிக் கல்லூரிக்கு பயிற்சிக்காக உள்வாங்கப்படும் போது பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்வதாகவும், அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும், அந்த பயிற்சியை முழுமையாக நிறைவு செய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்தபட்சம் பத்து வருடங்கள் (10) சுகாதார அமைச்சின் கீழ் /மாகாண அரச சேவையின் கீழ் உரிய பதவியில் சேவையாற்றுவதாகவும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தத்திற்கும், பிணைக்கும் உடன்படல் வேண்டும். மேற்படி 9.3 இற்கு அமைய பயிற்சியின் போது பயிற்சியிலிருந்து விலகினால், பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால், பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று பத்து (10) வருட காலம் மேற்படி உரிய பதவியில் சேவையாற்றுவதற்கு தவறினால் பயிற்சிக்காலத்தின் போது அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிடப்பட்ட செலவுகள் மற்றும் பிணைக்குரிய பணம் அவரினால் சுகாதார அமைச்சிற்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அப்பணத்தை அறவிடுவதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**10. சேவையில் ஈடுபடும் நியதிகள் :**

10.1. பயிற்சியின் முடிவில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசாங்கம் கடமைப்படவில்லை. இருப்பினும் பயிற்சியை நிறைவு செய்யும் தினத்தன்று நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய தயாரிக்கப்படும் முன்னுரிமை வெற்றிடங்களின் பட்டியலின்படி சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கிய பின்னர் மீதமுள்ள வெற்றிடங்களுக்கு பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்து இறுதிப்பரீட்சையில் சித்தியடையும் பயிலுனர்களின் பயிற்சி நெறியின் இறுதிப்பரீட்சை திறமையை கருத்திற்கொண்டு உரிய பதவியின் III ஆம் தரத்தின் பதவிக்கு நியமிப்பது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படும். அத்துடன் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கு கட்டுப்படல் வேண்டும்.

10.2. பயிற்சியின் நிறைவில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டால் அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

10.3. விண்ணப்பத்தை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் மற்றும் விபரங்களை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளடக்கப்பட வேண்டும். பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் போதும் நியமனம் பெற்ற பின்பும் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என நிரூபனமாகினால், சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனம் இரத்து செய்யப்பட்டு பயிற்சியிலிருந்து/ பதவிலிருந்து நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன், மீண்டும் அரச சேவையில் இணைய முடியாதவாறு கருப்புப்பட்டியலில் அவருடைய பெயர் சேர்க்கப்படும். பயிற்சிக் காலத்தில் இவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிட்ட செவினங்கள் மற்றும் ஒப்பந்த பணம் அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10.4. பயிற்சிக்கு இணைக்கப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர்வதற்கும் மற்றும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் உடல் ரீதியாகவும் மற்றும் உள ரீதியாகவும் தகுதியானவர்கள் என்பதை நிரூபிக்க பயிற்சியின் முதல் மாதத்திற்குள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், மருத்துவ பரிசோதனையில் தகுதியற்றவர் என காணப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர்வதற்கு தகுதியற்றவராக கருதப்படும்.

10.5. மேலே குறிப்பிட்டுள்ளபடி ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட சகல உத்தியோகத்தர்களும் அரச சேவைக்குரிய சட்ட திட்டங்கள், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் சட்ட திட்டங்கள், சுகாதார அமைச்சினால் தீர்மானிக்கப்படும் கொள்கைகள், அரச நிதிப்பிரமானம், அரசினால் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகள் மற்றும் அரசினால் காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் திருத்தங்கள் என்பவற்றுக்கு கட்டுப்படல் வேண்டும்.

10.6. பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சி கல்லூரிகளில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இந்த அமைச்சு கட்டுப்பட்டில்லை. அவ்வாறு வழங்கப்பட்டால் அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தங்குமிட அறைக்கான வாடகை, நீர் மற்றும் மின்சார கட்டணங்கள் அறவிடப்படும்.

10.7. இப்பயிற்சிக் காலத்தினுள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது தனியார் சேவையில் ஈடுபடுவதற்கான உரிமை இல்லை. அவ்வாறு பயிற்சியின் பின்னர் நீங்கள் உரிய பதவிக்கு நியமிக்கப்பட்டால், உங்களுக்கு தனியார் சேவையில் ஈடுபடுவதற்கான எவ்வித உரிமையும் இல்லை. அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கண்டறியப்பட்டால் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

10.8. பயிற்சிக்கு இணைத்தல் தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால், சுகாதார அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித்தீர்மானமாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து, சிங்கள மொழியே வலுவில் இருக்கும்.

டாக்டர் எஸ்.எச் முனசிங்க,
செயலாளர்
சுகாதார அமைச்சு

Dr. S. H. Munasinghe
Secretary
Ministry of Health
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10. Sri Lanka.

2020 ...12...21...... ஆம் திகதி
சுகாதார அமைச்சு
"சுவசிறிபாய"
385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு – 10.